மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) : கரூரிலிருந்து திண்டுகல்லுக்கு திட்டமிடப்பட்டுள்ள அகல இரயில் பாதைக்கான அளவை வேலை முடிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் திட்ட அறிக்கைகளும் மதிப்பீடும் இறுதியாக்கப்படுவதாக தென் மண்டல ரயில்வே பொது மேலாளர் தெரிவித்திருக்கிறார். திட்டமிடப்பட்டுள்ள பாதை தாந்தோணி, வெள்ளியணை, பாளையம், குஜிலியம்பாறை, கோவிலூர், எரியோடு, குளத்தூர் வழியாக செல்லுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ரயில் பாதையை விரைந்து முடிப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பரிந்துரைத்திருக்கிறோம். மேலும் பரிந்துரைக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ரயில் பாதையின் மொத்த நீளம் என்ன ? இதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மத்திய அரசிடம் கேட்கவேண்டிய கேள்வி.

Supply of tar by Madras Refinaries.

***462** *Q.*—THIRU N. S. V. CHITHAN : **Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Highways Department has entered into contracts with Madras Refinaries for the supply of tar by the end of the year ?**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, மார்ச்சு மாதம் 31-ம்தேதி பஞ்சாயத்துக்களில் ஹாஃப் கிராண்டு வேலைகள் முடிவடைய வேண்டியிருப்பதால், தார் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதால், தார் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தார் கிடைக்க ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஏதாவது குறைபாடு இருக்குமானால், கனம் உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : ஏற்கனவே நெய்வேலி தார் விலை அதிகமா என்று கேட்டதற்கு, அதன் விலை விவரம் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள் தற்பொழுது நமக்கு வேண்டிய தார் எங்கு வாங்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நமக்கு வேண்டிய தாரை இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனிடமிருந்து வாங்குகிறோம்.

தேனீ வளர்ப்புப் பண்ணை ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

* 463 வினா—: திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனீ வளர்ப்புத் துறையிலிருந்து வேலையிழந்த ஊழியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுக்கு நமது அரசு வேலையிழப்பிற்குப் பிறகு எதுவும் உதவி செய்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

1969 மார்ச் 25]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 130 பேர்கள்

(இ) ஆம்.

(உ) வேலையிழந்த தேனீ வளர்ப்புத் துறை பணியாளர்களில் 19 பேர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசினர் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்புத் திட்டத்துக்கு ரூ. 2,000 வரை கடன் உதவி அளிக்கப்படுகிறது. வேலை யிழந்த தேனீ களப்பணியாளர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு தனியாக தேன் விற்பனையாளர்களாக மாறலாம் என்றும், இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வோரின் கடன் விண்ணப்பங்களுக்கு முதலிடம் கொடுத்து பரிசீலிக்கவேண்டும் என்றும், தொழில் வணிகத் துறை இயக்குனருக்கு உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு பி. எஸ். தனுஷ்கோடி : இந்தத் தேனீ வளர்ச்சி தமிழகத்தில் ரொம்ப முக்கியமான தொழிலாக இருப்பதினால், மேலும் தேன் சாதாரண மருந்து வகையாகவும், உணவு வகையாகவும் ரொம்பவும் அதிகமாகத் தேவைப்படுவதினாலும், இந்தத் திட்டத்தை விஸ்தரித்து நல்ல முறையில் ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தேன் சிறந்த, நல்ல சத்துள்ள உணவு என்பதாலும், அது அதிகமான அளவிலே தயாரிக்கப்பட்டால் வெளி நாடுகளுக்குக் கூட அனுப்பமுடியும் என்பதினாலும், இந்தத் திட்டத்தை செயல்படுத்த நாம் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டோம். என்றாலும், நட்டம் ஏற்படுகிற இடங்களில் அந்தத் தொழில் நிலையங்களை நடத்த முடியவில்லை. பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்த முடியாது. கதர் கைத்தொழில் வாரியம் நடத்த முடியாது. தனிப்பட்டவர்கள் தூண்டுதல் மூலம்தான் அதை நடத்த வேண்டும் என்பதினால் ரூ. 2,000 கடன் கொடுத்து அந்தத் தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. அப்படி அந்தத் தொழில் செய்ய முன் வந்தால், தேவையான கடன் வசதி அவர்களுக்கு வழங்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தேன் சூட்டைத் தணிக்கும் என்று சொல்லப்படுவதால், அடிக்கடி வெளி நடப்புத் செய்யும் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு தேன் இனமாக சப்ளை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் உறுப்பினர் அவர்களே அவர்களுக்கு எந்தத் தேன் கொடுத்தால் சூடு தணியும் என்று கருதுகிறார்களோ, அதை அவர்களே வழங்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் துறையிலுள்ள பீல்டுமென் வேலையிலிருந்து நீக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு இலாகாக்களில் மாற்று வேலை கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : முதலாவதாக ஏராளமான பேர்களை வேலையிலிருந்து அனுப்பியதற்கு இப்பொழுது புதிய அரசு பொறுப்பல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், அந்தப் பணியாளர்களில் 19 பேர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு இடங்களில் அவர்களுக்கு தகுதி இருக்குமானால், வேலை வாய்ப்பு இருக்குமானால், மாற்று வேலை கொடுப்பதற்கும் வழி செய்யப் பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் மாற்று வேலை கொடுப்பதற்கும், அரசினர் போக்குவரத்துத் துறையில் நடத்துனர் (கண்டக்டர்) வேலை கொடுப்பதற்கும் கிராம வளர்ச்சித் துறையிலிருந்து வந்திருக்கிற வேண்டுகோளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. வாய்ப்பு கிடைக்கின்ற இடங்களில் அவர்களுக்கு இடம் தருவதுபற்றி அனுதாபத்துடன் அரசு கவனிக்கும்.